www.Padasalai.Net www.TrbTnpsc.com

TS6T

# தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

## தொகுத்தறித் தேர்வு - 2023

12-04-2023

### வகுப்பு 6

### தமிழ்

நேரம் : 2.00 மணி மதிப்பெண்கள்: 60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10×1=10

1) நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............
அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆடை

2) வாழ்வில் உயர கடினமாக ......... வேண்டும்.
அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

3) கீழே கொடுக்கப்பட்டவற்றுள் இடுகுறிப் பெயரை எழுதுக.
அ) பறவை ஆ) மண் இ) முக்காலி ஈ) மரங்கொத்தி

4) அன்னை தெரசாவிற்கு ........... க்கான நோபல் பரிசு கிடைத்தது.
அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

5) மணிமேகலையின் கையில் இருந்த அமுத - சுரபியில் உணவு இட்ட பெண் .........

6) ஏழைகளுக்கு உதவி செய்வதே ........... ஆகும்.

இ) பொருத்துக

7) இலக்கிய மாநாடு - பாரதியார்
8) தமிழ்நாட்டுக் கவிஞர் - சென்னை
9) குற்றாலம் - ஜி.யு.போப்
10) தமிழ்க்கையேடு - அருவி

ஈ) ஓரிரு சொற்களில் விடையளி (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்) 5×2=10

11) தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
12) பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
13) அமுத சுரபியின் சிறப்பு யாது?
14) ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?
15) வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?
16) சொற்களின் வகைகளை எழுதுக.
17) உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்றிற்கு மட்டும்) 3×4=12

18) காந்தியடிகளின் உடை மாற்றத்திற்கு காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
19) பராபரக் கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
20) மணிப்பல்லவத்தீவு எவ்வாறு காட்சியளித்தது?
21) பறவைகளும், விலங்குகளும் சுதந்திரமாக வாழ வேண்டுமெனில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
22) அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஊ) பின்வரும் மனப்பாடப் பகுதியினை அடிமாறாமல் எழுதுக.** **4+2=6**

23) 'புல்வெளியெல்லாம்' - எனத் தொடங்கும் தாராபாரதியின் பாடலை எழுதுக.

24) 'பருத்துண்டு' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**எ) பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **10×1=10**

25) சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆடம்பரம் ஆ) செடிகொடிகள்

26) இருபொருள் தருக.

அ) ஆறு ஆ) நகை

27) தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

28) ஒலி வேறுபாடறிந்து இருபொருள் தருக.

அ) அரம் ஆ) அறம்

29) தமிழெண்களை எழுதுக.

அ) 31 ஆ) 97

30) அகர வரிசைப்படுத்தி எழுதுக.

ஒழுக்கம், உயிர், ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஈதல், ஊக்கம், ஏது, ஔவை

31) கலைச்சொல் எழுதுக.

அ) Lorry ஆ) Trust

32) இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி குறளை எழுதுக.

மாசிலன் ஆதல் அனைத்தறன் மனத்துக்கண் நீர ஆகுல பிற

33) காரணப் பெயரை வட்டமிடுக.

அ) மரம் ஆ) வளையல் இ) கவர் ஈ) யானை

34) அடிக்கோடிட்ட சொல் எவ்வகைப் பெயர்ச்சொல் என எழுதுக.

மாலை முழுதும் விளையாட்டு

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** **1×6=6**

35) 'பாதம்' கதையினைச் சுருக்கி எழுதுக.

36) 'முடிவில் ஒரு தொடக்கம்' நிகழ்வினைச் சுருக்கி எழுதுக.

**ஐ) ஏதேனும் ஒன்றிற்கு விடையளி.** **1×6=6**

37) 'அறம் செய விரும்பு' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

38) நூல்கள் அனுப்ப வேண்டி பதிப்பகத்தாருக்கு கடிதம் எழுதுக.

- - - - - -

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com